(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 232.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2017 திசெம்பர் 09 சனிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

839/ '16

கௌரவ புத்திக பத்திரண,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில நகர்சேர் தூரப் பயணச் சேவை கடுகதி புகையிரதங்களிலுள்ள உறங்கல் பெட்டிகள் சீரழிந்துள்ளனவென்பதையும்;

(ii) சில புகையிரதங்களில் சிற்றுண்டிசாலை வசதிகள் இல்லையென்பதையும்;

(iii) தற்போதுள்ள சிற்றுண்டிசாலைகளும் முறைசார்ந்தவையாக இல்லையென்பதையும்;

(iv) புகையிரத சிற்றுண்டிசாலைகளில் தரக்குறைவான உணவு பானங்கள் அதிக விலையில் விற்கப்படுகின்றன என்பதையும்;

(v) மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களின் காரணமாக புகையிரதப் பயணிகள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனரென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி புகையிரதங்களில் வசதிகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அதற்காகச் செலவாகும் பணத்தொகை மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1386/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 144 இன் கீழ், இலங்கையின் வருடாந்த மீன் ஏற்றுமதியின் பெறுமதி சுமார் அமெரிக்க டொலர் 150 மில்லியன் என குறிப்பிடப்பட்டுள்ளதால், 1977 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இலங்கையின் வருடாந்த மீன் ஏற்றுமதியின் அளவு மற்றும் ஏற்றுமதிப் பெறுமதியை காட்டும் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) ஐரோப்பிய சந்தைக்கான மீன் ஏற்றுமதி தடை செய்யப்படுவதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தடையை நீக்குவதற்கு அப்போதைய மீன்பிடி அமைச்சர் கௌரவ ராஜித சேனாரத்னவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) ஐரோப்பிய சந்தைக்கான மீன் ஏற்றுமதித் தடையை நீக்குவதற்கு இலங்கை கடைப்பிடித்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) அதன் பிரகாரம் மீன் ஏற்றுமதித் துறையில் ஏற்பட்ட பிரதான மாற்றங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1469/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) தற்போது நிரந்தர கிராம உத்தியோகத்தரொருவர் காணப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் அங்கு சேவையில ஈடுபட்டுள்ள கிராம உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவை;

(iv) பதுளை மாவட்டத்தில் காணப்படும் கிராம உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1743/ '17

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறைச்சாலை காவலாளி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், 2016.10.19 ஆம் திகதி முதல் 2016.10.27 ஆம் திகதி வரை நடைபெற்ற நேர்முகப் பரீட்சை மற்றும் 2016.11.03 ஆம் திகதி முதல் 2016.11.12 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதென்பதையும் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையில் 2016.11.24 ஆம் திகதி கையொப்பமிடுமாறு தகைமை பெற்றவர்களுக்கு சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டு மீண்டும் அது ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட நியமனங்கள் இற்றைவரை வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நியமனம் வழங்குவதில் சிக்கல்மிகு நிலை உள்ளபோது நியமனம் பெறுபவர் களை அசௌகரியப்படுத்தும் வகையில் இவர்களுக்கு உடன்படிக்கைக் கடிதம் வழங்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) தகைமைகளை பூர்த்திசெய்துள்ள நியமனப்பெறுனர்களுக்கு நியமனங்களை வழங்காததன் மூலம் இவர்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், நியமனங்களை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1872/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டுபெத்த, பண்டாரநாயக்க மாவத்தையில் வலது புறமாகவுள்ள நீர்த்தேக்கத்தைச் சுற்றிலும் நடைபாதையொன்று நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் அப்பணிகள் இடையில் நிறுத்தப்பட்டதென்பதையும்;

(ii) நடைபாதையின் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு பெருமளவு வேலைகள் பூர்த்தியடைந்திருக்கும் போது அதன் ஒப்பந்தக்காரர் வேலைகளை நிறுத்திவிட்டு 2016.09.12 ஆம் திகதி இயந்திர உபகரணங்களை எடுத்துச் சென்றுள்ளதனால் அதன் பணிகள் மீண்டும் ஸ்தம்பிதமடைந்துள்ளது என்பதையும்;

(iii) தற்போது அந்த நீர்த்தேக்கமும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசமும் குப்பைகள் அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுவதனால் சுற்றாடல் மாசடைந்து நுளம்புகளின் எண்ணிக்கையும் பெரிதும் அதிகரித்துள்ளதென்பதையும்;

(iv) நடைபாதையின் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதனால், துப்பரவு செய்யப்பட்ட நீர்த்தேக்கமும் கால்வாயும் முழுமையாக காடடர்ந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நடைபாதையை நிர்மாணிப்பதற்கும் மற்றும் மிகவும் மாசடைந்துள்ள நீர்த்தேக்கத்தைத் துப்பரவு செய்யவும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இதன் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக ஏற்பட்ட செலவினை பொறுப்புக் கூறவேண்டியவர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

2109/ '17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில், மத்துகம கல்வி வலயத்தில் அமைந்துள்ள கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் நானூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விப் பொதுத் தராதரம் (சாதாரண தரம்) வரை கல்வி பயில்கின்றனர் என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையை "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய இரண்டு மாதங்களுக்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் கல்விப் பொதுத் தராதர (உயர் தர) வகுப்புகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், குறித்த வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2148/ '17

கௌரவ அசோக பிரியந்த,— நீர்ப்பாசன மற்றும் நீர் வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வடமேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட நீர்ப்பாசன கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த நீர்ப்பாசன கருத்திட்டங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் கீழ் அனுகூலங்களைப் பெறுகின்ற கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) குறிப்பிட்ட கருத்திட்டங்களின் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(v) நீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாண மக்கள் சார்பாக அமைச்சானது எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2284/ '17

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில், இலங்கை ஆசிரியர் சேவையின் 3(1) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்காக பரீட்சை நடாத்தப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிரப்புவதற்காக மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெற்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) எனவே, பரீட்சார்த்திகளுக்கு மேற்படி எந்த மொழியிலும் விடையளிக்கக் கூடியதாக இருந்தது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்காக சிங்கள மொழியில் விடையளித்த விண்ணப்பதாரிகளுக்கு தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், சிங்கள மொழிமூல வினாத்தாளுக்கும் ஆங்கில மொழியில் விடையளிக்க வேண்டுமென குறித்த பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையில் அல்லது வேறு வகையில் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(vi) ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறைக்காக சிங்கள மொழிமூலம் விடையளித்தல் தகைமையீனமாகுமென முன்னறிவித்தல் கொடுக்கப்படாத நிலையில், சிங்கள மொழிமூலம் விடையளித்த பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படாததன் மூலம் அநீதி நேர்ந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.1),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 முதல் 23 ஆம் இலக்கங்கள் வரையான விடயங்கள் மீதான நடவடிக்கைகள் இன்றைய தின அமர்வில், 7 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்தும் 2016.03.08 மற்றும் 2017.11.15 ஆகிய தினங்களில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளிலிருந்தும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் (இல.2),— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 22 ஆம் இலக்க பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2017 திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை சபை அமர்வு தினமாக இருக்குமாக. அத்துடன் அன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 09.30 மணி முதல் மு.ப. 10.30 மணிவரை இருக்குமாக. மு.ப. 10.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது, 2017 திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி, திங்கட்கிழமை மு.ப. 09.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2018) — (ஒதுக்கப்பட்ட இருபத்தி நான்காவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, நவம்பர் 08).

* 2.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 12, 14 மற்றும் 22 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 28 ஆம் திகதிய 2029/51ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மது அறிவித்தல் இலக்கம் 996)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய 2032/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மே 30 ஆம் திகதிய 2021/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 06 ஆம் திகதிய 2022/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 06 ஆம் திகதிய 2022/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 30 ஆம் திகதிய 2025/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 19 ஆம் திகதிய 2028/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 26 ஆம் திகதிய 2029/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 31 ஆம் திகதிய 2030/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.8),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 2030/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.9),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 2032/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.10),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய 2032/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.11),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2033/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.12),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 செத்தெம்பர் 08 ஆம் திகதிய 2035/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.13),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஒற்றோபர் 02 ஆம் திகதிய 2039/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பாக 2017.11.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2017 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 2031/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( 52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் கீழ், மதுபானம் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1000)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 2 ஆம் பிரிவின் கீழ், மதுவரி அறவிடத்தக்க பொருட்கள் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1001)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 3),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( 52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் கீழ், எதனோல் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1002)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 4),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் ( 52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் கீழ், 2015 திசெம்பர் 04 ஆம் திகதிய 1943/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 981 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலை இரத்துச்செய்து நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவம்பர் 15 ஆம் திகதிய 2045/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1003)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பாக 2017.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ( 3 ) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ( 3 ) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.11.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

பாராளுமன்றத்தின் திருத்தப்பட்ட வரைவு நிலையியற் கட்டளைகள்,— பாராளுமன்றத்தின் திருத்தப்பட்ட வரைவு நிலையியற் கட்டளைகள் தொடர்பாக 2017 நவம்பர் மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கை,— பரிசீலனை.

* 29.

கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 30.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 31.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 32.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 33.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 34.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 35.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

36.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2018) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

---